International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 3, Issue 3, July – September 2016 ISSN 2394-6393 (Online)

# பழந்தமிழர் வாழ்வில் மலர்களின் பங்களிப்பு

ம.பிரபு

*முனைவர்பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமியற்புலம,*
*புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605 014.*

முன்னுரை:சங்க இலக்கியப் பாடல்கள் பழந்தமிழரின் வாழ் வியலைச் சித்திரிக்கின்ற வரலாற்றுப் பெட்டகம். இவ்விலக்கியம் தமிழரின் இயறக்கையோடு இயைந்த வாழ்வினை அகம் புறம் எனும் இரு கூறுகளில் நின்று பேசுகிறது.இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பது, மலை, காடு, வயல், ஆறு, கடல் எனப் பரந்துப் பட்ட நிலப்பரப்புகளை தங்கள வாழ்வியல் சூழலுக்கேற்ப அமைத்துக் கொள்ளுதல் ஆகும். அவ்வாறே இயற்கையை மையமாகக்கொண்ட வாழ்க்கைச சூழலில செடி கொடிகள் ம லிடைந்து இலையுந் தழையும், பூவும் கனியும் நிறைந்த சோலை யாகவே தாம் வாழ்ந்த நிலப்பகுதியினைக் கருதினர் என்பது உள்ளுதற்குறியது.

பழந்தமிழர்கள் நிலத்த்தை வகைப்படுத்தியதுப் போலவே அகவாழ்க்கையை களவு, கற்பு என்றும் இல்லம் கடந்து நிகழ்ந்த நிகழ்வை புறம் என்றும் வகைப்படுத்தினர். இவ்விரு வாழ் வியல் நிலையிலும் தங்களுக்கு உரிய மலரினை முதன்மையாகக் கொண்டு தங்களின் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்தினர். அவ்வாறு அகம் புறம் எனும் இரு கூறுகளின் வாயிலாக பழந் தமிழர் கொண்டிருந்த மலர்கள் பற்றிய சிந்தனையைக் குறிப்பிட்ட சில பாடல்களின் மூலம் நிறுவ முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

*ஐந்திணை* ‘நாவலந் தண்பொழில்’ என விளங்கிய தாம் வாழ்ந்த நிலப் பகுதியினை ‘நானிலம்’ என்றழைத்தனர். மலையும் மலையைச் சார்ந்த இடம் குறிஞ்சி என்றும் காடும் காட்டைச் சார்ந்த இடம் முல்லை என்றும் வயலும் வயலைச் சார்ந்த இடம் மருதம் என்றும் கடலும் கடலைச் சார்ந்த இடம் நெய்தல் என்றும் கூறப்பட்டன.முல்லையும் குறிஞ்சியும் தத்தம் இயல்பு குன்றி வளம் குறைந்து காணப்படுமாயின் அந்நிலப் பகுதி பாலை எனப்பட்டது (மலர்காட்டும் வாழ்க்கை.ப.1) இவ்வாறு ஐந்திணை என்னும் வழக்கம் ஏற்பட்டது.

பழந்தமிழர் வரலாற்றிறக் எட்டாத காலந்தொடங்கியே நிலத்தை ஐந்திணையாகப் பிரித்து முறைப்படுத்தியுள் ளனர். இவ்வைந்திணைகளுக்கு இடப்பட்டுள்ள பெயர்வைப்பு முறை களைக் குறித்துத் தனிநாயகம் அடிகள் கூறும் வரிகள் பினவ்ருமாறு,நாகரிக மற்ற மக்கள் அவ்வந் நிலங்களில் தோன்றும் பயிர் அல்லது உணவுப் பொருளின் பெயரை அத்திணைகளுக்குக் கொடுத்திருப்பர் என்றும் அவ்வாறு செய்யாமல் அவ்வந் நிலத்தில் சிறப்பாகக் காணக்கிடக்கும் மலரின் பெயர்களை கொண்டே அவ்வந்நிலத்திற்குப் பெயரிட்டுள்ள சிறப்பு பெரிதும் பாரட்டத் தக்கது (மலர் காட்டும் லாழ்க்கை.ப.2) இதன் மூலம் மலர்களின் பெயரால் அமைந்த நிலங்களின் பெயர்க்காரணம் குறித்து அறியமுடிகிறது.

மேலும் காஞ்சிமலர் மிகுதியால் காஞ்சிமாநகர் என்று பெயர் எய்தியதும் வஞ்சிமலர் மிகுதியால் வஞ்சிமாநகர் எனப் பெயர் எய்தியதும் பூவின்பால் நிலத்திற்கு வந்த பெயர்களாகும். (அற்றை நாட் காதலும் வீரமும்.ப.95) எனவே தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகள் மலரின் மணம் கொண்டு அழகுற விளங்கின என்பதற்கு மேற்கண்ட விளக்கங்கள் சான்றாகும்.

அகம் சங்க இலக்கிய பாடல்கள் மொத்தம் 2381 அவற்றில் அகக்கருத்தினை மட்டும் பேசும் பாடல்கள 1862 ஆகும். இப்பெரும் எண்ணிக்கை பண்டைய மனிதனின் அகவாழ்க்கையை நமக்குப் பலவாறு விளக்குகின்றன.’அகம்’ என்பதற்குஉள்ளத்தே எழுந்த அவா உடல் வழிப் படர்ந்து உள்ளத்தைக் குளிப்பது ஆகலின் உள்ளம் என்பதோடு தொடர்புபட ‘அகம்’ என்றனர்.(அற்றைநாட் காதலும் வீரமும்.ப.88) அகம் என்பதற்குத் தரும் விளக்கமாகும்.இவ்வகவொழுக்கம் சார்ந்த திணைகளை

*கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*

*முற்படக் கிளந்த எழுதிணை என்ப*
*(தொல்.பொருள்.அகம்.947)*

என ஏழுவகையாக வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர்.

*களவு* குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ,பாலை எனும் அகன் ஐந்திணையில் நிகழும் களவு வாழ்வில் மலரின் தேவையும் மலர்த்தொடர்பாக அமையும் வாழ்க்கை முறையும் குறித்து அகப் பாடல்கள் விரிவாகப் பேசுகின்றன. கற்பிற்கு முந்தைய கால கட்டமான ‘களவு வாழ்க்கை’ ‘ஒன்றுபடுத்தும் ஊழ்வினையாலும் வேறுபடுத்தும் ஊழ்வினையாலும் ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்பட்டு அதன்வழி நிகழும் என்பர்’ இக்களவு வாழ்க் கையில ் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர் கூட்டம், பாங்கியர் கூட்டம் எனும் களவு கால சந்திப்புகள் நிகழும். இச்சந்திப்புகள் அந்தந்த நிலம்சார் சூழலோடு மிகவும் பொருந்தி வருகின்றன என்பதற்கு மலர்களை கையாண்டு புலவர் கள் கட்டமைக்கும் இயற்கைக்காட்சிகளே சான்று.

பண்டைத்தமிழர் இயற்கைச் சூழல்களுக்கிடையே வாழ்ந்த வாழ்க்கை முறையில் பெண்கள் சென்று வரும் இடங்களாகத் தினைப்புனங்காத்தல், புனலாடல், மலர்கொய்தல் முதலியவை குறிக்கப்படுகின்றன. மேலும் அந்தந்த நில மகளிர் அவர் களின் இயற்கைச் சூழலுக்கேற்றவாறு வாழ்வினை இனிதே கழிப்பர். மேற்கண்ட நிகழ்வுகளில் ஒன்றான மகளிர் மலர்கொய்தல் மூலம் நிகழக்கூடிய களவுகால காட்சியை அந்நிலத்தில் பெறப்படும் மலரால் புனையப்பட்டுள்ளது.என்பதற்கு

*மலிபூஞ் சாரல் என் தோழி மாரோடு*
*ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி*
*புலி புலி என்னும் பூசல் தோன்ற*
*(அகம்.48)*

ஏன வரும் சங்க இலக்கியப்பாடல் சான்றாகிறது. இப்பாடலின் பொருளாவது மலர்க்கொய்தலில் ஈடுபட்டிருக்கும் தலைவி,தோழி முதலானோர் வேங்கையின் உயர்ந்த கிளைகளில் இருக்கும் மலரைப் பறிப்பதற்குப் புலி புலி எனக் குரல் எழுப்புவர் என்றும், இவ்வோசையைக் கேட்ட மரக்கிளை அவர்களுக்குத் தாழ்ந்து கொடுத்து உதவிப்புரியும் என்றும் குறிப்பிடப்படுகிறது. மகளிர் எழுப்பும் ஓசை பூத்து நின்ற வேங்கை மரம் குறித்து அமைந்தது எனினும் அக்காட்டகத்தே புலி வேட்டையை எதிர் நோக்கி நின்ற

தலைவனுகக்குப் புலி வந்துள்ளது என எண்ணம் தோன்ற அவ்வோசை எழுந்த திசையை நோக்கி ஓடி வருகிறான். இச்சூழலில் தலைவனும் தலைவியும் சந்திப் பதன் மூலம் களவு வாழ்க்கைத் தொடக்கம் கொள்கிறது.

வேங்கை மலரை மையமாகக் கொண்டு நிகழத்தப்பெற்றுள்ள இக்காட்சி அமைப்பில் தலைவியின் மென்மையைக் குறிப்பதற்கு மலர்க்கொய்தலும், தலைவனின் வீரத்தைக்குறிப்பதற்கு வேட்டையாடுதலும் என இருவேறு நிகழ்வுகளும் ஒருங்கே தரப்பட்டுள்ளது. மேலும் வேங்கை மலர் மலர்கின்ற இளவேனிற் காலம் வரைவிற்கு உகந்த நாள் எனும் குறிப்புச் சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணக்கிடக்கிறது.

*வேங்கை மலரும் காலமே திருமணத்திற்கு ஏற்ற காலம் என்பது பண்டைய கால மரபு. (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை.ப.406)*

எனும் மு.வ.அவர்களின் கூற்றும் இதற்குச் சான்று. எனவே வேங்கை மலரின் வாயிலாகப் பிறந்த இவர்களின் களவுவாழ்க்கை இல்வாழ்க்கையாக மாற வேண்டும். என்று கூறுவதன் மூலம் களவின் திண்மையை குறிப்பால் உணர்த்துகிறது எனலாம். களவு வாழ்க்கையின் இறுதியில் தலைவன் தலைவி இருவருக்கும் வரைவு உண்டாயிற்று.அப்பொழுது தோழியானவள் தலைவியை நோக்கி வரைவு கிட்டும் வரை ஏற்பட்டிருந்த தலைவனின் பிரிவுத் துயரத்தை எவ்வாறு பொறுத்துக்கொண்டாய் என வினவுகிறாள். அதற்குத் தலைவி, ஒரு நாள் மாலையில் நம் தலைவர் மலையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் அங்கிருந்த ஒரு காந்தள் செடி நம் ஊருக்கு வந்தது. நான் அதை எடுத்து நம் இல்லத்தில் நன்கு பேணினேன். பின்பு அக்காந்தள் மலரைக் காணும் போதெல்லாம் தலைவனை பார்ப்பதாக எண்ணி அவர் நினைப்பிலே திளைத்திருப்பேன். என மறுமொழி கூறுவதாகச் சங்க இலக்கியப் பாடல் ஒன்று அமைகிறது.அவையே,

*உயர்நிலை உலகமும் திறிதால் அவர்மலை*
*மாலைப்பெய்த மணம்கமழ் உந்தியொடு*
*காலைவந்த காந்தள் முழுமுதல்*
*(குறுந்.361)*

களவு கால சந்திப்பில் பல்வேறு இடையூறு ஏற்படுவதும் அதற்காக இருவரும் வருந்துவதும் குறிப்பிடத்தகுந்த ஒன்று. அத்தகைய நிலையில்தான் தலைவனின் மலைநாட்டில் பிறந்த இக்காந்தள் மலர் தலைவியின் தனிமைத்துயர் நீக்க துணை நின்றது எனலாம். காந்தள் மலர்தலைவன் நாட்டகத்தே பிறந்த காரணத்தால் அவை தலைவியின் உள்ளத்தில் தலைவனாக உருக்கொண்டு விளங்குகிறது. என்பதை மேற்கண்ட குறிப்புகளின் வாயிலாக அறியமுடிகிறது. மலர்களின் துணைகொண்டு நடைபெற்ற இக்களவு காட்சியில் இயற்கையோடு வாழ்ந்த பழந்தமிழரின் மனவெளிப்பாட்டைக் காணமுடிகிறது.

கற்பு தலைவன் தலைவி மனம் ஒன்றுபட்ட நிலையில் திருமணம் செய்து கொண்டு வாழும் வாழ்க்கை ‘மணவாழ்க்கை’ என்று அழைப்பர். மணம் என்பது இயற்கையில் கிடைக்கக்கூடிய பல்வேறு நறுமணங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும் இலக்கியங்களில மலர்களின் மணம் என்ற பொருளிலே பெரும்பான்மை காணமுடிகிறது என்பதை,பல்பழப் பலவின் பயம்கெழு கொல்லிக் கார்மலர் கடுப்ப நாறும்.(அகம்.208)

*பூதம் தந்த பொரி அரை வேங்கைத்*
*தண்கமழ்புதுமலர்நாறும் (அகம்.365)*

எனும் இவ்வடிகள் சுட்டுகின்றன. பலவகை மலர்களால் நிறையப்பெற்று மணம் கமழுகின்ற சூழலில் பண்டைய திருமணச் சடங்குகள் நடைபெற்றன.

*நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி பல்இருங் கதுப்பின்*
*நெல்லொடு தயங்க, வதுவைநல்மணம்கழிந்தபின்றை*
*(அகம்.86)*

எனும் இவ்வடிகள் திருமணச் சடங்கின் போது நீரோடு குளிர்ந்த இதழ்களையுடைய மலர்களை நெல்லுடன் கலந்து தலைவியின் தலை மீது தூவி வாழ்த்தினர். மேலும் திருமணம் நடைபெற்ற நன்னாளில் தலைவன் தலைவிக்கு மலர்ச் சூட்டும் சடங்கு நிகழ்த்தபட்டதையும் அகப்பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.அவ்வடிகள் வருமாறு,

*நல் மனை வதுவை அயர, இவள்*
*பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே! (ஐங்.294)*

திருமணச் சடங்கின் முக்கிய நிகழ்வான ‘ மங்கல அணி’ அணிவித்தலில் மலர்கள் தாலியாக விளங்கின என்பதை, சிலம்பு.நா.செல்வராசு பின்வருமாறு குறிப்பிடுகிறார். நாடார் குல மக்களிடையேமங்கல அணி “பனம் பூந்தாலி” என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றது. ஆதியில் பனம்பூவே தாலியாக அணியப்பட்டு வந்த வழக்கையோ பின்னாளில் பொன் முதலிய உலோகங்களால் தாலி செய்யப்பெற்றது.(பண்டைத் தமிழர் திருமண வாழ்க்கை.ப.62).

மேற்கண்ட குறிப்புகள் மூலம் மண நிகழ்வின் போது மலர்கள் பெறும் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது. காலத்தை அறிவித்தலில் மலர்கள் முக்கியப் பங்காற்றுகின்றன

*‘குரவம் மலர்ந்து முன்பனிக் காலம் நீங்கியது, இளவேனிற் காலம் வந்தது’ (அகம்.97),*
*‘தாம் பொருளீட்டும் காலத்து எல்லை, அம்முல்லை பூக்கத் தொடங்கும் காலத்து எல்லையே’*
*(அகம்.23)*

எனும் இவ்வரிகளின் மூலம் இளவேனிற் காலம், கார் காலம் பற்றிய குறிப்புகளை அறியமுடிகிறது. மேலும் அல்லி, தாமரை, நெருஞ்சி மலர்கள் பகற்பொழுதிலும் முல்லை மல்லிகை முதலியவை இரவு நேரத்திலும் மலர்ந்து நின்று அப்பொழுதினை உணர்த்தின. இவ்வாறு காலத்தை புலப்படுத்தி நிற்கும் மலர்கள் பிரிந்து வாடும் தலைவன், தலைவி வாழ்வில் எவ்வாறு பங்கு கொள்கின்றன என்பதையும் சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவுபட பேசுகின்றன.

வினைவயிற் பிரிவு மேற்கொள்ளும் தலைவன் தான் வருவதாகக் கூறிச் சென்ற கார் காலத்தில் திரும்பாது வினை நீட்டிக்கிறான்.அந்நிலையில் தலைவி அடைகின்ற துயரினை விளக்குவதாக அமைகிறது அகப்பாடல் ஒன்று. அப்பாடலின் பொருள் வருமாறு

*“தங்கள் குடியிருப்புகளில் பால் கொணர்ந்து கொடுத்து கூழ்பெற்றுத் திரும்பும் இடையர்கள் தலையில் முல்லை மலர்கள் சூடியுள்ளதைக் கண்ட தலைவி கார் காலமும் வந்துவிட்டது முல்லையும் மலர்ந்து விட்டது தலைவன் ஏன் இன்னும் வரவில்லை எனத் தோழியிடம் வினவி துயரம் கொள்கிறாள்” (குறுந்.221).*

தலைவி இல்லம் கடந்து செல்லாத நிலையிலோ அல்லது தனது இல்லத்தையொட்டிய சுற்றுப்புறத்தில் முல்லை மலர்கள் காண இயலாத நிலையில் இடையர்கள்

சூடிவந்த முல்லை மலரினைக் காணுகிறாள். உடனே தலைவனின் பிரிவை எண்ணி வருந்துகிறாள். இங்கு முல்லை மலரானது வெறுமனே காலத்தை உணர்த்தி நின்றது என்பதைக் காட்டிலும் அன்பு டையோர் இருவரின் அகவாழ்வு குறித்த மேன்மையை வெளிப்படுத்த துணைநின்றது எனலாம்.

ஆண், பெண் இருவரது ஒப்பனைகளிலும் அணிகலன்களாகப் பூக்கள் விளங்கியுள்ளன. மேலும் காலத்தை நடுநிலையோடு உணர்த்தி களவு, கற்பு எனும் இரு நிலைகளிலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் மலர்கள், தலைவன் தன்னை விட்டு நீங்கிய காலத்தில் மலர்கள் ஏதும் சூடாது திகழும் தலைவியின நிலை குறித்தும் சங்க பாடல்களில் குறிப்புகள் கிடைக்கின்றன. எனவே பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வானது மலர்கள் கொண்டு புனையப்பெற்ற வாடாத இளந்தளிராக விளங்குகிறது என்பதற்கு மேற்கண்ட கூற்றுகளே சான்றாகும்.

*புறம்* அகத்திணையியலுக்குப் புறம்பாக அமைவது புறத்திணையியல் ஆகும். குறிஞ்சி முதலான ஐந்திணைகளுக்கு மலர்களின் பெயர்களைக் கொண்டு அமையப்பெற்றுள்ளதைப் போன்று புறத்திணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதை

*வெட்சிதானே குறிஞ்சியது புறனே (தொல். பொருள்.புறம். 1002)*
*வஞ்சி தானே முல்லையது புறனே (மேலது. 1007)*
*உழிஞை தானே மருதத்துப் புறனே (மேலது. 1010)*
*தும்பைதானே நெய்தலது புறனே (மேலது. 1015)*
*வாகைதானே பாலையது புறனே (மேலது. 1019)*

எனும் தொல்காப்பிய நூற்பாக்கள் புலப்படுத்துகின்றன. போரும் பூசலும் நிறைந்த பண்டைய தமிழரின் வாழ்க்கை முறையில் அடையாளப் படுத்துதல் என்பதன் நோக்கில் வெட்சி முதலிய மலர்கள் சூட்டப் பெற்றன என்பதை க.ப.அறவாணன் அவர்களின் கூற்று பின் வருமாறு அமைகிறது.

*‘‘போருக்குச் செல்வார், தம் நோக்கமும் தமது அடையாளமும் விளங்க பூ அணிவர்’’ (அற்றை நாட் காதலும் வீரமும். ப.94)*

போரின் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு வகைப் பூவை கண்ணியாகச் சூட்டிக்கொள்வர்.அவற்றில் வெட்சி, கரந்தை, நொச்சி ,தும்பை முதலிய மலர்கள் குறிப்பிடத்தகுந்தவை ஆகும். போருக்கான பூவை மன்னன் வீரர்களுக்கு வழங்கும் ‘பூக்கோள்’ என்ற நிகழ்ச்சி நடைபெறுவதையும் அப்பூவை வீரர்கள் பெற்று செல்லும்படி வள்ளுவன் ஒருவன் முரசு அறைவதையும், புறப்பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

*பாசறைப் பூக்கோள் இன்று என்று அறையும்*

*மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே (புறம்.289)*

இவ்வடிகள் மூலம் பூக்களின் பெயர் கொண்டு போரின் நிலைகள் வகுக்கப்பட்டன என்பது தெளிவாகிறது. தமிழ் கூறும் நல்லுலகத்தை ஆட்சி செய்தவர்களில் சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர். வேந்தர் என்ற சொல்லே வேய்ந்தோர் என்பதன் மரூஉ என்பார். செ.வைத்தியலிங்கன் மேலும் தலையில் முடிவேய்ந்தோர் என்றும், தமக்கென கொண்ட மரபுடன் மலர் வேய்ந்தோர் என்றும் சிந்தித்துப் போற்றும் வகையில் முடியில் மலர் மாலையினை இணைத்துச் சூடியிருக்கின்றனர். (தமிழ்ப் பண்பாட்டு வரலாறு.ப.47) வேந்தர் என்ற சொல் குறித்து இவர் தரும் இவ்விளக்கம் நோக்கத் தக்கதாகும். முடியுடை வேந்தர் மூவருள்ளும் எழும் பகையின்போது தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் விதமாக ஆர், அத்தி, வேம்பு போன்ற மலர்களை சூடி நின்றனர் என்பதை,

*வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துப் புகழ்ப் போந்தே*

*வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும் (தொல்.புறம்.1006)*

என தொல்காப்பிய நூற்பாவும், இதே கருத்தை வலியுறுத்தும்

*இரும் பனை வெண் தோடு மலைந்தோன் அல்லன்*
*கருஞ் சினை வேம்பின் தெரியலோன் அல்லன்*
*நின் கண்ணியும் ஆர் மிடைந்தன்றே (புறம்.45)*

எனும கோவூர்கிழாரின் புறநானூற்றுப் பாடலும்மூவேந்தர்கள் சூடிய மலர் மாலை குறித்த குறிப்புகளை தருவதாக அமை கின்றன. சிறு நிலப்பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர் சிலருக்கும் அடையாளப் பூவாகச் சில பூக்கள் இருந்துள்ளன என்பதை *எழினி என்னும் மன்னன் கூவிளங் கண்ணியை மாலையாக அணிந்திருந்தான், அண்டிரன் என்பவன் சுரபுன்னைப் பூவை கண்ணியாக உடையவன். (சங்க இலக்கியத்தில் மலர்கள்.ப.113)* எனும் இவ்வரிகள் சான்றுகாட்டி அமைகின்றன. மேற்கண்ட குறிப்புகளின் வாயிலாக வேந்தர்களின் மணிமுடியை அலங்கரித்தலிலும் அடையாளத்தை வெளிப்படுத்துதலிலும் மலர்கள் முக்கியப் பங்கு வகித்துள்ளன என்பது தெளிவாகிறது. பேரரசினை ஆண்ட வேந்தர்களின் ஆளுகைக்கு உட்பட்டும் உட்படாமலும் சிறுநிலப்பகுதிகளை ஆட்சி செய்தவர்கள் குறுநில மன்னர்கள். வீரமே அவர்களது குடியையும் நாட்டையும் காத்து நின்றது. என்பதற்கு அவனது நாட்டுவளம் பற்றி பாடும் புலவர்களின் கூற்று வழி புலப்படுகிறது. அவ்வாறு நாட்டிலமலர்கள் மிகுதியாக மலர்ந்து இருக்கும் காட்சி செழிப்பின் அடையாளமாகக் கருதப்பட்டது. என்பதை,

*கொண்டல் கொண்ட நீர் கோடை காயினும் கண் அன்ன*
*மலர் பூக்குந்து, கருங் கால் வேங்கை மலரின்,நாளும்*
*பொன் அன்ன வீ சுமந்து (புறம்.137)*

ஒரு சிறைப் பெரியனார் எனும் புலவரின் இவ்வடிகள் நாஞ்சில் வள்ளுவன் என்னும் குறுநில மன்னனின் நாட்டு வளத்தைக் குறித்து அமைகிறது. வளம் பொருந்திய நிலத்தில் மலர்கள் பூத்துக் கிடப்பதும் மகளிர் அதை சூடி மகிழ்வதும் இனிமையான வாழ்க்கைச் சூழலைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இச்சூழலுக்கு எதிர்மறையாக ஒரு நாடு திகழுமானால் அதற்கு அந்நாட்டையாளும் மன்னனின் செயல்திறமே காரணம் என்பதை புலவர் கோவூர் கிழார் விளக்குகிறார்.

*சோழர் குடியின் வழித்தோன்றல்களான நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையே நிகழ்ந்த போரில் நலங்கிள்ளிக்கு பயந்து கோட்டைக்குள் பதுங்கியிருக்கும் நெடுங்கிள்ளியின் செயல் நாணத்தக்கது என்றும். விரும்பதகாத இச்செயலால் அந்நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்றும் குறிப்பிடுகிறார். அவற்றில் மகளிர் தலையில் பூச்சூடுதலின்றி காணப்படுகின்றனர் என்ற குறிப்பையும் பதிவு செய்கிறார். (புறம்.44)*

இங்கு நெடுங்கிள்ளியின் இழிவுநிலையானது மகளிர் சூடும் மலர்கள் மூலம் வெளிப்பட்டு நிற்கிறது எனலாம்.

பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி குறித்து, புலவர் காரிக்கிழார் பாடும்,

*வாடுக பெரும நின் கண்ணி ஒன்னார் நாடு சுடு கமழ் புகை எரித்தலானே*

*(புறம்.6)*

பகைவர் நாட்டைத் தீயிட்டு கொளுத்தியதால் எழும் புகையே நின் மாலை வாடுதற்குக் காரணம் என்று வென்ற மன்னனின் இயல்பு குறித்து அமைகிறது.அதேபோல், போரில் தோல்வியுற்ற மன்னனின் நாடும் நாட்டு மக்களும் அடைந்த துயரத்தையும் புறப்பாடல்கள் பதிவு செய்கின்றன என்பதை, குமட்டூர்க் கண்ணனாரின் பாடல் மூலம் வெளிப்படுகிறது.

*நீ சிவந்து இறுத்த நீர்அழி பாக்கம் விரிபூங் கரும்பின் கழனி புல்லென (பதிற்று.13)*

எனும் இவ்வடிகள் கரும்பு பாத்தியில் பூத்த நெய்தல் மலர் எருமைக்கு உணவாகும். இவ்வளம் பொருந்திய நின் பகைவர் நாடானது உன் சினத்திற்கு ஆளாகி இன்று பாழ்பட்டு கிடக்கிறது என்று கூறப்படுகிறது. மேலும் இதே கருத்தை வலியுறுத்தும் குடவாயிற் கீரத்தனாரின் கையறுநிலை பாடலான

*இளையோர் சூடார் வளையோர் கொய்யார் நல்லியாழ்*
*மருப்பின் மெல்ல வாங்கி பாணன் சூடான் பாடினி*
*அணியாள் ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்து வல்*
*வேற் சாத்தன் மாய்ந்த பின்றை முல்லையும் பூத்தியோ*
*ஒல்லையூர் நாட்டே? (புறம்.242)*

எனும் அடிகள் ஒல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன் இறந்த போது இளையோர் முதலாக பாடினி ஈறாகப் பல்வேறு தரப்பினரும் துயரம் கொண்டுள்ளனர்.இந்த நிலையில் உன்னை சூடுவார் யாரும் இங்கில்லை என அந்நாடும் நாட்டுமக்களும் அடைந்த துயரத்தை முல்லை மலர்கள் மூலம் வெளிப்படுத்துவதாக உள்ளன.

## தொகுப்புரை

உலக இலக்கியங்கள் பலவற்றுள் முன்னோடியாகத் திகழ்வது சங்க இலக்கியமாகும். இவற்றுள் இயற்கை என்ற சொல்லை எவ்விடத்திலும் குறிப்பிடாது இயற்கை சார்ந்த புனைவுகளை முழுமுதலாய் கொண்டு திகழ்வது இவ்விலக்கியத்தின் தனித்தன்மையாகும். மலை, காடு, ஆறு, கடல் என வேறுபட்ட நிலரப்பரப்பில் வாழ்ந்தமக்களின் அகவாழ்விலும் பலரும் அறியும்வண்ணம் நிகழ்ந்த புறவாழ்விலும் மலர்களுக்கென உரிய மதிப்பினை நல்கியுள்ளனர் என்பதற்கு மேற்கண்ட விளக்கங்கள் சான்றாகும்.

அகவாழ்வில் தலைவன், தலைவியின் உள்ளநிகழ்விற்கு வழிகோலும் மலர்கள் புறவாழ்வில் மன்னனின் அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன. மேலும் மன்னனின் சினத்தையும் நாட்டு வளத்தையும் பறைசாற்றும் விதமாக விளங்குகிறது என்பதை புலவர்களின் இலக்கிய வரிகள் கொண்டு அறியமுடிகின்றது. மணம், நிறம், வடிவம் என பன்முகத்தன்மைக் கொண்டு விளங்கும் மலர்கள். பழந்தமிழரின் வாழ்வியலைச் சித்திரிக்கின்ற ஒரு பண்பாட்டு கருவியாகவும் திகழ்கிறது.என்பதை முடிவாகக் கூறி இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

## துணைநூல்கள்

[1] அறவாணன் க.பா., அற்றைநாள் காதலும் வீரமும், மெய்யப்பன் தமிழ் ஆய்வாகம், சிதம்பரம் 2002.
[2] ஆலிஸ் அ. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், என்.சி.பி.எச்.,சென்னை, 2004.
[3] ஜெயபால் இரா. அகநானுறு மூலமும் உரையும் என்.சி.பி.எச்., சென்னை. 2004.
[4] சிலம்பொலி செல்வராசு , பண்டையத் தமிழர் திருமண வாழ்க்கை, காவ்யா பதிப்பகம், சென்னை. 2004.
[5] தானமாள் அ. சங்க இலக்கியத்தில் மலர்கள் வானதி பதிப்பகம், சென்னை. 1981.